★ சென்னை ராயபுரம், கோவை புதூர், திருச்சி நவல்பட்டில் காவல்துறை கட்டிடங்கள்
★ நாகர்கோவில் ஆயுதப்படை வளாகத்தில் ரூ.2¾ கோடியில் 200 காவலர்களுக்கான பாளையம்

ரூ.33 கோடியில் 153 காவலர் குடியிருப்புகள்: முதல்வர் எடப்பாடி பழனிசாமி திறந்தார்

சென்னை, அக். 27–

முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி இன்று (27–ந் தேதி) தலைமைச் செயலகத்தில், உள்துறை சார்பில் கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் ஆயுதப்படை வளாகத்தில் 2 கோடியே 74 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 200 காவலர்களுக்கான பாளையத்தை காணொலிக் காட்சி (வீடியோ கான்பரன்சிங்) மூலமாகத் திறந்து வைத்தார். மேலும் 33 கோடியே 11 லட்சத்து 31 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 153 காவலர் குடியிருப்புகள், 8 காவல் நிலையங்கள், 3 காவல் துறை கட்டடங்கள் ஆகியவற்றையும் திறந்து வைத்தார்.

மாநிலத்தின் அமைதியைப் பேணிப் பாதுகாப்பது, சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பது, குற்றங்கள் நிகழாமல் தடுப்பது, குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தக்க தண்டனை பெற்றுக் கொடுப்பது போன்ற பல்வேறு முக்கிய பணிகளை காவல்துறை ஆற்றி வருகின்றது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த காவல்துறையின் பணிகள் மேலும் சிறக்க, புதிய காவல் நிலையங்கள் மற்றும் காவலர் குடியிருப்புகளைக் கட்டுதல், காவல்துறை அலுவலகங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், ரோந்து பணிகளை மேற்கொள்ள புதிய வாகனங்களை வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை புரட்சித் தலைவி அம்மா வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் ஆயுதப்படை வளாகத்தில் 2 கோடியே 74 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 200 காவலர்களுக்கான பாளையத்தை முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி இன்று காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்.

ரூ.4½ கோடியில் 8 காவல் நிலையம்

மேலும், மதுரை மாவட்டம் – திருப்பரங்குன்றம் போக்குவரத்து மற்றும் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு 4 குடியிருப்புகள், நாகப்பட்டினம் மாவட்டம் – நாகப்பட்டினம் ஆயுதப்படை வளாகத்தில் 18 குடியிருப்புகள், தூத்துக்குடி மாவட்டம் எட்டையபுரத்தில் 32 குடியிருப்புகள், திருநெல்வேலி மாவட்டம் இலத்தூர் மற்றும் ஆலங்குளத்தில் 31 குடியிருப்புகள், விருதுநகர் மாவட்டம் – ம.புதுப்பட்டியில் 12 குடியிருப்புகள் மற்றும் விழுப்புரம் மாவட்டம் – காக்குப்பம் ஆயுதப்படை வளாகத்தில் 56 குடியிருப்புகள் என 18 கோடியே 59 லட்சத்து 90 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 153 காவலர் குடியிருப்புகள்;

ராமநாதபுரம் மாவட்டம் – கீழத்தூவல் மற்றும் திருப்பாலைக்குடி, தஞ்சாவூர் மாவட்டம் – பட்டுக்கோட்டை தாலுக்கா, திருச்சி மாவட்டம் – ஸ்ரீரங்கம், தூத்துக்குடி மாவட்டம் – திருச்செந்தூர் தாலுக்கா மற்றும் விருதுநகர் மாவட்டம் – தளவாய்புரம் ஆகிய இடங்களில் 4 கோடியே 63 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 8 காவல் நிலையங்கள்;

சென்னை பெருநகர் – ராயபுரத்தில் சமுதாய நலக்கூடம், கோயம்புத்தூர் மாவட்டம் – கோவைபுதூரில் தமிழ்நாடு சிறப்பு காவல் படை 4–ம் அணிக்கான பாளையம் மற்றும் திருச்சி மாவட்டம் – நவல்பட்டில் மேம்படுத்தப்பட்ட காவல் பயிற்சி பள்ளி என 9 கோடியே 88 லட்சத்து 16 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 3 காவல் துறை கட்டடங்கள்;

என மொத்தம் 35 கோடியே 85 லட்சத்து 31 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள காவலர்களுக்கான பாளையங்கள், காவலர் குடியிருப்புகள், காவல் நிலையங்கள் மற்றும் இதர காவல் துறை கட்டடங்களை முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி இன்று திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் கிரிஜா வைத்தியநாதன், உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, காவல்துறை தலைமை இயக்குனர் டி.கே. ராஜேந்திரன், சென்னை பெருநகர காவல்துறை ஆணையர் அ.கா. விஸ்வநாதன், தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் ந. தமிழ்செல்வன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

எந்த சவாலையும் எதிர்கொள்ள எப்போதும் தயாராக இருங்கள்

கடற்படைக்கு நிர்மலா சீதாராமன் அறிவுறுத்தல்

புதுடெல்லி,அக்.27–

எந்த சவாலையும் எதிர்கொள்ள எப்போதும் தயாராக இருக்கவேண்டும் என்று இந்திய கடற்படையை ராணுவ அமைச்சர் நிர்மலா சீதாராமன் கேட்டுக்கொண்டார்.

டெல்லியில், இந்திய கடற்படை உயர் அதிகாரிகள் கருத்தரங்கம் கடந்த 24ந் தேதி தொடங்கியது. அதில், இந்திய கடற்படையின் தயார்நிலை பற்றி விவாதிக்கப்பட்டு வருகிறது. இந்திய பெருங்கடல் பிராந்தியத்தில் சீன கடற்படையின் நடமாட்டம் அதிகரித்து இருப்பது பற்றியும், தெற்கு சீனக்கடலில் அதன் இருப்பு பற்றியும், தனது ஒட்டுமொத்த ஆதிக்கத்தை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது பற்றியும் இந்த கருத்தரங்கில் விவாதிக்கப்பட்டு வருகிறது.

இந்த கருத்தரங்கில், ராணுவ அமைச்சர் நிர்மலா சீதாராமன் நேற்று கலந்து கொண்டார். அவர் பேசியதாவது:–

நமது அண்டை நாட்டு கடல் பகுதியில் சமீபகாலமாக எதிர்மறை நிகழ்வுகள் நடந்து வருகின்றன. இதை கருத்தில் கொண்டு, நமது கடற்படை எந்த சவாலையும் எதிர்கொள்ளும் வகையில், எப்போதும் தயார்நிலையிலும், விழிப்புடனும் இருக்க வேண்டும். கப்பல் மூலமாக ஹெலிகாப்டர்கள் கொண்டு செல்வதில் உள்ள குறைபாடுகள் விரைவில் களையப்படும்.

கடந்த ஓராண்டாகவே, கடற்படை மிகுந்த தயார்நிலையில் இருப்பதை நான் அறிவேன். தெற்கு சீன கடலில் இருந்து பாரசீக வளைகுடா மற்றும் அட்லாண்டிக் பெருங்கடல் வரை கப்பல்கள், நீர்மூழ்கி கப்பல்கள், விமானங்கள் ஆகியவற்றை இந்திய கடற்படை நிறுத்தி இருக்கிறது.

ஏடன் வளைகுடா பகுதியில், கடற்கொள்ளைகளை ஒடுக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த ஆண்டு, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாட்டு கடற்படைகளுடன் 'மலபார் கூட்டு பயிற்சி' வெற்றிகரமாக நடந்தது. அதுபோல், அடுத்த ஆண்டு, போர்ட் பிளேரில் 'மிலன் கூட்டு பயிற்சி' என்ற ஒத்திகை நடைபெறும்.

இவ்வாறு நிர்மலா சீதாராமன் பேசினார்

குஜராத் போராட்டத்தில் போலீஸ் துப்பாக்கிச்சூடு:ஒருவர் பலி

டாகோட்,அக்.27–

குஜராத்தில் உள்ள டாகோட் மாவட்டத்தில் நடைபெற்ற போராட்டத்தில் போலீஸ் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் ஒருவர் பலியானார்.

குஜராத் மாநிலத்தில் உள்ள டாகோட் மாவட்டத்தில், போலீஸ் விசாரணைக்கு அழைத்துச்செல்லப்பட்ட நபர் மர்மமான முறையில் உயிரிழந்தார். இதைக்கண்டித்து, போலீசாருக்கு எதிராக உள்ளூர் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த போராட்டத்தின் போது, காவல்துறையினர் மீது பொதுமக்கள் கல்வீசி தாக்குதல் நடத்தினர்.

இதையடுத்து, போரட்டத்தை கட்டுப்படுத்த காவல்துறையினர் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இந்த துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்தார். இதனால், டாகோட் மாவட்டத்தில் உள்ள டெசில் பகுதியில் பதட்டமான சூழல் நிலவுகிறது.

316 உதவி மருத்துவர்களுக்கு பணி நியமன ஆணை...

(1–ம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் தெரிவித்தார்.

கடமை உணர்ந்து சேவையாற்றுங்கள்

கிராமப்புற மக்களுக்குத் தேவையான உரிய சிகிச்சை அளிப்பதற்காக உதவி மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு, பல்வேறு மருத்துவர் பணியிடங்களெல்லாம் படிப்படியாக நிரப்பப்பட்டு வருகிறது. அதேபோல் உதவி மருத்துவர்களாக இன்றைக்கு பணி ஆணை பெற இருக்கின்ற சகோதர, சகோதரிகள் தங்களுடைய கடமைகளை உணர்ந்து மக்களுக்கு சேவை புரிய வேண்டும். ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வருகின்றவர்கள் ஏழை, எளிய மக்கள். ஆகவே, அப்படிப்பட்ட மக்களுக்கு இதமாக பேசி, உரிய சிகிச்சை அளித்து, அவர்களுக்கு பூரண குணமடைய செய்வதற்குண்டான சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அதுமட்டுமல்ல, தற்போது டெங்கு காய்ச்சல் படிப்படியாக குறைந்து கொண்டிருந்தாலும், ஆங்காங்கே இன்னும் ஒரு சில இடத்திலே இருப்பதாக தகவல் வருகின்றது. ஆகவே பணி ஆணைபெறுகின்றஉதவி மருத்துவர்கள் தங்கள் பகுதியிலே காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக ரத்த பரிசோதனை செய்து அதற்குண்டான சிகிச்சை மேற்கொள்ள வேண்டும். பணி நியமனம் பெறுகின்ற உதவி மருத்துவர்கள் பொதுமக்களுக்கு சிறந்த முறையில் சேவையாற்ற வேண்டும் " என்று வாழ்த்தினார்.

இந்த நிகழ்ச்சியில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், தலைமைச் செயலாளர் கிரிஜா வைத்தியநாதன், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை முதன்மைச் செயலாளர் ஜெ. ராதாகிருஷ்ணன், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை ஆணையர், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மோகன் பியாரே, தேசிய ஊரக நலவாழ்வு சங்கத்தின் குழும இயக்குனர் தாரேஸ் அஹமது,

தமிழ்நாடு மருத்துவ சேவைக்கழகத்தின் மேலாண்மை இயக்குநர் உமாநாத், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரிய தலைவர் வே.ராஜாராமன், தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குனர் உமா மகேஸ்வரி, மருத்துவக் கல்வி இயக்குநர் அ. எட்வின் ஜோ, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குனர் கு. குழந்தைசாமி, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் கூடுதல் இயக்குநர் (ஆய்வு) டாக்டர் பி. பானு, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குனர் எம். ஆர். இன்பசேகரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பொருளாதாரத்தின் மார்பில் சுட்டு பேரழிவை ஏற்படுத்தி விட்டார் மோடி

ராகுல்காந்தி கடும் விமர்சனம்

புதுடெல்லி, அக்.27–

பிரதமர் மோடி நமது பொருளாதாரத்தின் மார்பில் இரண்டு தடவை சுட்டு பேரழிவை ஏற்படுத்தி உள்ளார் என்று ராகுல்காந்தி தாக்கி பேசி உள்ளார்.

பண மதிப்பு நீக்கம் மற்றும் ஜி.எஸ்.டி. தொடர்பாக மத்திய அரசுக்கும், ராகுல் காந்திக்கும் இடையே தினமும் வார்த்தைப் போர் நடந்து வருகிறது. ஜி.எஸ்.டி. வரி விதிப்பால் நாட்டின் பொருளாதாரம் உயரும் என்று பாரதீய ஜனதா மூத்த தலைவர்கள் கூறி வருகிறார்கள். ஆனால் இதை ஏற்க மறுத்த ராகுல், 'ஜி.எஸ்.டி. என்பது கப்பர் சிங் டேக்ஸ்' என்று விமர்சித்தார்.

பண மதிப்பு நீக்கம் செய்யப்பட்ட நவம்பர் 8ந்தேதியன்று ''கருப்பு தினம்'' கடை பிடிக்க ராகுல் திட்டமிட்டுள்ளார். இந்த நிலையில் டெல்லியில் நேற்று வர்த்தக அமைப்பு மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய ராகுல் மீண்டும் மோடியை தாக்கிப் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

பிரதமர் மோடி கொண்டு வந்துள்ள பணமதிப்பு நீக்கமும், ஜி.எஸ்.டி.யும் கமாண்டோ படை வீரர்கள் இரண்டு தடவை சுட்டுத் தள்ளுவது போன்ற பணியில் உள்ளது. கமாண்டோ படை வீரர்கள் முக்கிய நேரங்களில் தீவிரவாதிகளை வீழ்த்த இலக்கு நோக்கி அடுத்தடுத்து 2 தடவை சுடுவார்கள். எதிரியை கொல்வதை உறுதி செய்ய இந்த இரட்டை சுடுதல் கடை பிடிக்கப்படுவதுண்டு.

அத்தகைய கமாண்டோ படை வீரர்கள் போல பிரதமர் மோடி நமது பொருளாதாரத்தின் மார்பில் அடுத்தடுத்து பணமதிப்பு நீக்கம் மற்றும் ஜி.எஸ்.டி.யால் இரண்டு தடவை சுட்டு விட்டார். இதனால் இந்திய பொருளாதாரம் கொல்லப்பட்டு விட்டது. பணமதிப்பு நீக்கம் கொண்டு வரப்பட்ட போதே இந்திய பொருளாதாரத்தில் மோடி பேரழிவை ஏற்படுத்தி விட்டார். அவருக்கு இந்திய பொருளாதாரம் பற்றி தெரியவில்லை. இந்திய பொருளாதாரத்தின் அடிப்படை கருத்தை அவர் புரிந்து கொள்ளவில்லை.

பணமதிப்பு நீக்கத்தால் கருப்பு பணத்தை ஒழித்து விட்டதாக சொல்கிறார்கள். எல்லா பணமும் கருப்பு பணம் அல்ல. அது போல எல்லா கருப்பும் பணம் அல்ல. இதை புரிந்து கொள்ளாமல் மோடி தனது அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி இந்தியர்கள் மீது தீவிரவாத தாக்குதல் நடத்தி உள்ளார்.

மத்திய அரசை நிறைய பேர் மலைபோல நம்பிக் கொண்டிருந்தனர். இன்று அந்த நம்பிக்கை செத்து விட்டது. பிரதமர் மோடியும் அவரது அரசும் ஒவ்வொரு இந்தியனையும் திருடன் மாதிரி நினைத்து செயல்படுகிறது. இதனால் நாட்டின் பொருளாதாரத்தில் பேரழிவு ஏற்பட்டுள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தி குறைந்து விட்டது. தனியார் முதலீடுகளில் கடும் குழப்பம் நிலவுகிறது. வேளாண் வளர்ச்சி படுபாதாளத்துக்கு போய் விட்டது.

நாடு முழுவதும் வேலையில்லா திண்டாட்டம் அதிகரித்து வருவது கவலை அளிப்பதாக உள்ளது. நாடு இப்படி இருக்கும் நிலையில் நிதி அமைச்சர் அருண்ஜெட்லி தினமும் நாடு நன்றாக இருப்பதாக டி.வி.யில் பேசி வருகிறார். 2019ம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலுக்குப் பிறகு இந்த நிலைமை மாறும். நாட்டில் மீண்டும் சகஜ நிலை ஏற்படுத்தப்படும். ஜி.எஸ்.டி. வரியில் நாங்கள் பெரிய அளவில் சீர்திருத்தங்கள் செய்து அதை எளிமைப்படுத்துவோம்.

சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்தான் நாட்டின் வேலை வாய்ப்பை அதிகரிக்க செய்யும். எனவே பொருளாதாரத்தின் முதுகெலும்பான சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்துறை வலுப்படுத்தப்படும். வங்கிகள் கூட இப்போது பெரிய நிறுவனங்களுக்கு மட்டுமே உதவி செய்கின்றன. இந்த நிலை மாற்றப்படும். 3½ ஆண்டுகளுக்கு முன்பு மோடி பேசியதை கேட்டு மக்கள் நம்பினார்கள். மிகவும் எதிர்பார்த்தனர். ஆனால் இன்று அந்த எதிர்பார்ப்புகள் உடைந்து நொறுங்கி விட்டன.

மக்கள் இப்போதுதான் எங்கள் மதிப்பையும் தலைமையையும் உணர்ந்து வருகிறார்கள். ஆனால் இப்போது பாரதீய ஜனதாவினர், தாஜ்மகால் இந்தியர் கட்டியதா என்று விவாதம் நடத்தி கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் பார்த்து மக்கள் சிரிக்கிறார்கள். சீன அரசு தினமும் தனது மக்களுக்காக சுமார் 50 ஆயிரம் வேலை வாய்ப்புகளை உருவாக்கி கொடுக்கிறது. ஆனால் இந்தியாவில் தினமும் 450 வேலை வாய்ப்புகளே உருவாக்கப்படுகின்றன.

ரூ.500, ரூ.1000 நோட்டுகளை கொன்று விட்டார்கள். அந்த ரூபாய் நோட்டுகளின் முதலாண்டு நினைவு நாள் நவம்பர் 8 ந் தேதி நாடு முழுவதும் கடைபிடிக்கப்பட உள்ளது.

2019ல் காங்கிரஸ் ஆட்சி மலர்ந்ததும் தற்போது பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள எல்லா சிக்கல்களும் தீர்க்கப்படும். நான் இதை எப்போதும் என் மனதில் வைத்திருப்பேன்.

இவ்வாறு ராகுல் காந்தி பேசினார்.

பொது அறிவிப்பு

இதன் மூலம் நுகர்வோருக்கு தெரிவிக்கப்படுவது யாதெனில், ஸ்டார் இந்தியா பிரைவேட் லிமிடெட்டிற்கு உரிமை கட்டண நிலுவைத் தொகை, சந்தா ஒப்பந்தத்தில் கையெழுத்திடாததால் மற்றும் உண்மையான மற்றும் சரியான சந்தாதாரர்கள் அறிக்கையை சமர்ப்பிக்காததால் கீழ்க்குறிப்பிட்டுள்ள கேபிள் டிவி ஆபரேட்டர் (எச்ஜடிஎஸ்) விரும்பிய ஸ்டார் இந்தியா பிரைவேட் லிமிடெட்டின் சிக்னல்கள் (உள்ளடக்கியது : ஸ்டார் பிளஸ் எச்டி, ஸ்டார் பாரத் எச்டி (எர்ஸ்ட்வைல் லைப் ஓகே எச்டி), ஸ்டார் கோல்டு எச்டி, மூவிஸ் ஓகே, சேனல் V, ஸ்டார் உத்சவ், ஸ்டார் உத்சவ் மூவிஸ், ஸ்டார் ஸ்டோர்ட்ஸ் 1, ஸ்டார் ஸ்டோர்ட்ஸ் 2, ஸ்டார் ஸ்டோர்ட்ஸ் 1 இந்தி, ஸ்டார் ஸ்டோர்ட்ஸ் 1 தமிழ், ஸ்டார் ஸ்டோர்ட்ஸ் செலக்ட் 1, ஸ்டார் ஸ்டோர்ட்ஸ் செலக்ட் 2, ஸ்டார் வேர்ல்டு, ஸ்டார் மூவிஸ், என்ஜிசி, நாட் ஜியோ வைல்டு, நாட் ஜியோ பீப்பிள், பாக்ஸ் லைப், நாட் ஜியோ மியூசிக், பேபி டிவி, ஸ்டார் பிரவாக், ஸ்வர்ணா, ஸ்வர்ணா பிளஸ், ஸ்டார் ஜல்ஷா, ஜல்ஷா மூவிஸ், ஏசியாநெட், ஏசியாநெட் பிளஸ், ஏசியாநெட் மூவிஸ், விஜய் டிவி, விஜய் சூப்பர், எம்ஏஎ டிவி, எம்ஏஎ மூவிஸ், எம்ஏஎ மியூசிக், எம்ஏஎ கோல்டு, ஸ்டார் கோல்டு செலக்ட் மற்றும் ஸ்டார் ஸ்போர்ட்ஸ் (பார்ஸ்ட்) (கூட்டாக ''சேனல்கள்'' என்று குறிப்பிடப்படும்) ஆகியவை இன்றிலிருந்து மூன்று வாரங்களுக்கு பிறகு ஸ்டார் இந்தியா பிரைவேட் லிமிடெட்டால் துண்டிக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. குறிப்பிடப்படும்) இன்றிலிருந்து மூன்று வாரங்களுக்கு பிறகு துண்டிக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

எச்ஜடிஎஸ் ஆபரேட்டர்(கள்) பெயர்	முகவரி
கிராண்ட் இன்வெஸ்டிரேட் லிமிடெட்	எஸ்ஸல் ஷியாம், 4வது மாடி, சி–34, செக்டார் – 62, எலக்ட்ரானிக் சிட்டி, நொய்டா – 201 307, உத்தரப்பிரதேசம்

கிராண்ட் இன்வெஸ்டிரேட் லிமிடெட்டின் கீழ் உள்ள உரிமையாளர்கள் உள்ளிட்ட அனைத்து ஆபரேட்டர்களுக்கு அளிக்கப்படும் சேவைகள் பாதிக்கப்படும்.

Star

வெளியீடு:

ஸ்டார் இந்தியா பிரைவேட் லிமிடெட்

ஸ்டார் ஹவுஸ், ஊர்மி எஸ்டேட், 95 கண்பத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை–400 013.

பொது அறிவிப்பு

இதன் மூலம் நுகர்வோருக்கு தெரிவிக்கப்படுவது யாதெனில், ஸ்டார் இந்தியா பிரைவேட் லிமிடெட்டிற்கு சந்தா ஒப்பந்தத்தில் கையெழுத்திடாததால் மற்றும் உண்மையான மற்றும் சரியான சந்தாதாரர்கள் அறிக்கையை சமர்ப்பிக்காததால் கீழ்க்குறிப்பிட்டுள்ள கேபிள் டிவி ஆபரேட்டர் (எச்ஜடிஎஸ்) விரும்பிய ஸ்டார் இந்தியா பிரைவேட் லிமிடெட்டின் சிக்னல்கள் (உள்ளடக்கியது : ஸ்டார் பிளஸ் எச்டி, ஸ்டார் பாரத் எச்டி (எர்ஸ்ட்வைல் லைப் ஓகே எச்டி), ஸ்டார் கோல்டு எச்டி, ஸ்டார் ஸ்போர்ட்ஸ் எச்டி 1, ஸ்டார் ஸ்போர்ட்ஸ் எச்டி 2, ஸ்டார் ஸ்போர்ட்ஸ் 1 எச்டி இந்தி, ஸ்டார் ஸ்போர்ட்ஸ் செலக்ட் எச்டி 1, ஸ்டார் ஸ்போர்ட்ஸ் செலக்ட் எச்டி 2, ஸ்டார் வேர்ல்டு பிரீமியர் எச்டி, ஸ்டார் வேர்ல்டு எச்டி, ஸ்டார் மூவிஸ் செலக்ட் எச்டி, ஸ்டார் மூவிஸ் எச்டி, நேஷனல் ஜியோகிராபிக் எச்டி, நாட் ஜியோ வைல்டு எச்டி, நாட் ஜியோ பீப்பிள் எச்டி, பாக்ஸ் லைப் எச்டி, பேபி டிவி எச்டி, நாட் ஜியோ மியூசிக் எச்டி, ஸ்டார் பிரவா எச்டி, ஸ்டார் ஜல்ஷா எச்டி, ஜல்ஷா மூவிஸ் எச்டி, விஜய் டிவி எச்டி, ஏசியா நெட் எச்டி, எம்ஏஎ எச்டி, ஸ்டார் கோல்டு செலக்ட் எச்டி, எம்ஏஎ மூவிஸ் எச்டி மற்றும் சுவர்ணா எச்டி) (கூட்டாக ''சேனல்கள்'' என்று குறிப்பிடப்படும்) ஆகியவை இன்றிலிருந்து மூன்று வாரங்களுக்கு பிறகு ஸ்டார் இந்தியா பிரைவேட் லிமிடெட்டால் துண்டிக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

எச்ஜடிஎஸ் ஆபரேட்டர்(கள்) பெயர்	முகவரி	பகுதிகள்
கிராண்ட் இன்வெஸ்டிரேட் லிமிடெட்	49/50, இன் சென்டர், எம்ஜடிசி, 12வது சாலை, அந்தேரி (கிழக்கு), மும்பை – 400 093, மகாராஷ்டிரா	இந்தியா முழுவதும்

ஆபரேட்டர்(கள்) மற்றும் அதன் உரிமையாளர்களால் அளிக்கப்படும் சேவைகள் அனைத்து பகுதிகளிலும் பாதிக்கப்படும்.

Star

வெளியீடு:

ஸ்டார் இந்தியா பிரைவேட் லிமிடெட்

ஸ்டார் ஹவுஸ், ஊர்மி எஸ்டேட், 95 கண்பத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை–400 013.

equitas

எக்விடாஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 410A, 4வதுமாடி, ஸ்பென்ஸர் ப்ளாசா, ஃபேஸ் II, எண். 769, மவுண்ட் ரோடு, அண்ணாசாலை, சென்னை 2
CIN: L65100TN2007PLC064069 | Ph: 044 4299 5000 | www.equitas.in

செப்டம்பர் 30, 2017 வரை முடிவடைந்த மூன்று மாத மற்றும் அரையாண்டிற்கான தனிப்பட்ட மற்றும் ஒட்டு மொத்த தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் (₹ லட்சத்தில்)

வ. எண்	விபரங்கள்	தனிப்பட்ட முடிவுகள்				ஒட்டு மொத்த முடிவுகள்			
		முடிவடைந்த மூன்று மாதங்கள் 30 செப் 2017	முடிவடைந்த அரையாண்டு 30 செப் 2017	முடிவடைந்த ஆண்டு 31 மார்ச் 2017	முடிவடைந்த மூன்று மாதங்கள் 30 செப் 2016	முடிவடைந்த மூன்று மாதங்கள் 30 செப் 2017	முடிவடைந்த அரையாண்டு 30 செப் 2017	முடிவடைந்த ஆண்டு 31 மார்ச் 2017	முடிவடைந்த மூன்று மாதங்கள் 30 செப் 2016
		தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்பட்டது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்பட்டது	தணிக்கை செய்யப்படாதது
1	செயலாக்கங்களிலிருந்து மொத்த வருமானம்	344.03	674.84	1,229.59	341.04	41,730.66	87,055.05	155,221.16	38,446.25
2	இக்காலம் / ஆண்டுக்குரிய நிகர இலாபம் வரி, மற்றும் வழக்கத்திற்கு மாறான / அசாதாரண வகைகளுக்கு முன்	217.97	395.71	750.30	205.21	1,743.06	4,278.79	26,263.41	8,476.75
3	இக்காலம் / ஆண்டுக்குரிய நிகர இலாபம் வரிக்கு முன் மற்றும் வழக்கத்திற்கு மாறான / அசாதாரண வகைகளுக்குப் பின்	217.97	395.71	750.30	205.21	1,743.06	4,278.79	25,156.09	7,369.43
4	இக்காலம் / ஆண்டுக்குரிய நிகர இலாபம் வரி, வழக்கத்திற்கு மாறான / அசாதாரண வகைகளுக்குப் பின்	136.56	246.40	468.17	122.95	1,091.24	2,651.16	15,936.57	4,634.90
5	சமபங்கு மூலதனம்	33,900.90	33,900.90	33,781.37	33,695.61	33,900.90	33,900.90	33,781.37	33,695.61
6	காப்புநிதிகள் மறுமதிப்பீட்டு காப்புநிதிகள் தவிர்த்து (முந்தைய ஆண்டின் இருப்பு நிலை அறிக்கையில் காண்பித்துள்ளபடி)			133,728.36	–	–	–	189,279.00	–
7	தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயலாக்கங்கள் ஈட்டிய பங்கு ஒன்றுக்கான வருவாய் – மூன்று மாதங்கள் மற்றும் அரையாண்டு முடிவில்								
(i)	அடிப்படை (₹)	0.04	0.07	0.14	0.04	0.32	0.78	4.79	1.38
(ii)	குறைமதிப்பு (₹)	0.04	0.07	0.14	0.04	0.32	0.77	4.69	1.34

குறிப்பு: மேற்குறிப்படப்பட்டவைகள் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015-ன், விதி 33-ன் படி பங்கு வர்த்தக நிறுவனத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மூன்று மாதங்களுக்கான மற்றும் அரையாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத முழுவடிவிலான நிதிநிலை முடிவுகளின் சுருக்கப்பட்ட வடிவம் ஆகும். மூன்று மாதங்களுக்கான மற்றும் அரையாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழு படிவமும் நிறுவனத்தின் **www.equitas.in** என்ற இணையதளத்திலும், பங்குவர்த்தக நிறுவனத்தின் **www.nseindia.com, www.bseindia.com** என்ற இணையதளங்களிலும் காணலாம்.

இயக்குனர்கள் குழு சார்பாக
sd. S பாஸ்கர்
செயல் இயக்குனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி

இடம் : சென்னை
தேதி : 26 அக்டோபர் 2017